ISSN - 2235-9796

20 பக்கங்கள் : விலை 30/-

# Valai வலை

சமகால பொது அறிவுத் தொகுப்பு


உண்மை
நேர்மை
நம்பிக்கையே
உயர்ச்சி தரும்

சிலந்தி - 06 | ஒக்ரோபர் - 2016 | இழை - 61

**வாசக நெஞ்சங்களுக்கு...!**



(யாழின் தங்கம்) (16)



(நோபல் 2016) (15)



(மான் புக்கர்) (12)

வலையின் இதழ் 61 ஆவது இழையில் உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். எப்படி சௌக்கிய மாக இருக்கிறீர்களா?

நாம் ஒரு சிறந்த மனிதனாக சமூகத்தில் வளர்ந்து வருவதற்கு எமது சிறுவயதிலிருந்தே நாம் எம்மைத் தயாரப்படுத்திக் கொள்ள வேண்டும். பெற்றோரால் அல்லது பெரியோ ரால் பழக்கப்படுத்தப்படல் வேண்டும்.

எந்த ஒரு செயலையும் நாம் விரும்பியோ விரும்பாமலோ சிறிது காலத்திற்கு தொடர்ந்து செய்து வந்தால், எம்மை அறியாமலேயே அச்செயல் எமக்குப் பழக்கப்பட்டு, அதில் ஒரு பிடிப்பும், விருப்பமும் ஏற்பட்டு, எம் ஆழ் மனதில் அது பதிந்துவிடுவதனால் அச்செயலைத் தொடர்ந்தும் செய்வதற்கு எமமை அறியாமலேயே எம்மை கடுமையாகத் தூண்டும்.

எனவேதான் சிறு வயதிலிருந்தே சிறந்த பழக்க வழக்கங்களைப் பழக வேண்டும் என்றும், உயர் மனிதப் பண்புகளைக் கடைப்பிடிக்க வேணடும் என்றும் பெரியோர்கள் வற்புறுத்திக் கூறுகிறார்கள்.

எனவே நாம் விட்ட தவறுகளை எமது பிள்ளைகளும் விடாதபடி பார்தது்க்கொள்ளோம். எனவே நேர்ப்பாதை யில் அவர்களை வழிநடத்தி அவர்தம் லட்சியத்தை அடையும் போது அவன் ஒரு சிறந்த மனிதனாக சமூகத்தில் வாழுவான்.


இந்த இதழ் தொடர்ந்து வெளிவருவது உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. எனவே உங்கள் ஆதரவில் எனது பணி தொடரும்...

நன்றி.

'வலை' வீசல் தொடரும்...

சி.என்.எச்.சாள்ஸ்
தொகுப்பாசிரியர்

# இம்மாத சர்வதேச தினங்கள்...




✧ ஒக்ரோபர் - 01 - உலக சிறுவர் தினம்
✧ ஒக்ரோபர் - 01 - உலக மரக்கறிகள் தினம்
✧ ஒக்ரோபர் - 01 - உலக முதியோர் தினம்
✧ ஒக்ரோபர் - 02 - உலக சைவ உணர்வாளர் தினம்
✧ ஒக்ரோபர் - 02 - உலக அகிம்சை தினம்
✧ ஒக்ரோபர் - 03 - உலக மது ஒழிப்பு தினம்
- 03 - உலக உயிரினங்கள் தினம்
✧ ஒக்ரோபர் - 04 - உலக விலங்குகள் தினம்
✧ ஒக்ரோபர் - 05 - உலக இயற்கைச் சூழல் தினம்
- 05 - உலக குடியிருப்பு தினம்
✧ ஒக்ரோபர் - 08 - உலக இயற்கைச் சிரழிவு குறைப்பு தினம்
- 08 - உலக ஓய்வூதிய தினம்
✧ ஒக்ரோபர் - 09 - உலக தபால் தினம்
✧ ஒக்ரோபர் - 09 - உலக கண்பார்வை தினம்
✧ ஒக்ரோபர் - 10 - உலக மனநல தினம்
✧ ஒக்ரோபர் - 11 - உலக பெண் பிள்ளைகள் தினம்
✧ ஒக்ரோபர் - 12 - உலக மூட்டுவாத தினம்
✧ ஒக்ரோபர் - 14 - உலக தரநிர்ணய தினம்
✧ ஒக்ரோபர் - 14 - உலக முட்டை தினம்
✧ ஒக்ரோபர் - 15 - உலக உளவளத்துணை தினம்
✧ ஒக்ரோபர் - 16 - உலக கை கழுவுதல் தினம்
- 16 - உலக உணவு தினம்
✧ ஒக்ரோபர் - 17 - உலக வறுமை ஒழிப்பு தினம்
✧ ஒக்ரோபர் - 20 - உலக புள்ளிவிபரவியல் தினம்
- 20 - உலக ஒஸ்டியோபொரோஸிஸ் தினம்
✧ ஒக்ரோபர் - 21 - உலக விவசாய தினம்
✧ ஒக்ரோபர் - 24 - உலக ஐக்கிய நாடுகள் சபை தினம்
✧ ஒக்ரோபர் - 29 - உலக இணையத்தள தினம்
- 29 - உலக பாரிசவாத தினம்
✧ ஒக்ரோபர் - 30 - உலக சிக்கன தினம்
✧ ஒக்ரோபர் - 31 - உலக நகர தினம்
- 31 - உலக சுகாதார தினம்

## உங்கள் பார்வையில் வலை...

வலை குறித்து உங்களது கருத்துக்களை எழுதி, Passport அளவு புகைப்படத்தினையும் இணைத்து அனுப்புங்கள். அவை காலக்கிரமத்தில் வலையில் பிரசுரிக்கப்படும்.

# இலங்கை பற்றிய இம்மாத வலை வீசலில்...

❒ நியூஸிலாந்து பிரதமர் ஜோன் கீக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அன்பளிப்பாக வழங்கிய யானையின் பெயர் என்ன?
**அஞ்சலி**

❒ யாழ்.மாவட்டத்தில் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வகை வாழை இனத்தின் பெயர் என்ன?
**ஹபன்டிஸ்**

❒ உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு அண்மையில் (10.10.2016) கொழும்பு வந்து சென்ற ஐ.நா.வின் சிறுபான்மை இனவிவகாரங்களுக்கான சிறப்பு அறிக்கையாளர் யார்?
**ரீட்டா ஐசேக் நடியா**

❒ இந்திய - இலங்கை கடலோரக் காவல் படைகளுக்குமிடையில் இரு தரப்பு புரிந்துணர்வையும், உறவுகளையும் வலுப்படுத்தும் வகையில் கொழும்பு வந்து சென்ற இந்தியக் கப்பலின் பெயர் என்ன?
**சமுத்ர பகீரெடர்**

❒ இலங்கையின் சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்கு உதவி வரும் நாடு எது?
**அமெரிக்கா**

❒ இலங்கையில் இவ்வாண்டு (2016) விபத்தினால் எத்தனை பேர் சாவடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது?
**2 ஆயிரத்து 800 பேர்**

❒ இலங்கையில் சிறுநீரக நோய் அதிகரித்துள்ள நிலையில் நோய்க்கான காரணத்தைக் கண்டறிவதற்காக எந்த நாட்டுடன் இலங்கை புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது?
**சீனா**

❒ இலங்கையில் யாரிடையே வாய்ப்புற்றுநோய் அதிகமாக உள்ளதாக ஆய்வு மூலம் அறியப்பட்டுள்ளது?
**ஆண்களிடம்**

❒ இலங்கை இருதய சங்கம் தனது அறிவறிக்கையில், இலங்கையில் இருதய நோயினால் அதிகம் யார் பாதிக்கப்படுவதாக குறிப்பிட்டுள்ளது?
**பெண்கள்**

❒ 18 மாத இழுபறி முடிவுக்குப் பின்னர் தோட்டத் தொழிலாளருக்கு எத்தனை ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளது?
**750/-**

❒ அண்மையில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்ட பரீட்சைகளின் புதிய கட்டணங்கள் எவை?

1. **க.பொ.த. உயர்தரம் - 400/-**
   **- செயன்முறைப் பரீட்சை - 300/-**
2. **க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை - 350/-**
3. **ஆசிரியர் கல்லூரிப் பரீட்சை - 600/-**
4. **தேசிய கல்விக் கல்லூரி சகல பாடங்களுக்கும் - 400/-**
5. **பட்டப்பின் கல்வி டிப்ளோமா அனுமதி பரீட்சை - 900/-**

❒ 2016 தேசிய வாசிப்பு மாதத்தின் தொனிப்பொருள் என்ன?
**"வாசிக்கும் நாடும் அறிவுள்ள நாளையும்"**

❒ சம்பூர் அனல் மின் நிலையத்திற்குப் பதிலாக எங்கே மின் நிலையம் இந்தியாவின் உதவியுடன் அமைக்கப்படவுள்ளது?
**கெரவலப்பிட்டியவில்**

❒ ஒக்ரோபர் 08-16 வரை இலங்கையில் நடைபெற்ற தேசிய விவசாய வாரத்தின் கருப்பொருள் என்ன?
**"ஒன்றாய் நாட்டைக் கட்டியெழுப்புவோம் - விவசாயத்திற்கு முதலிடம்"**

❒ அண்மையில் (15.10.2016) வாகன விபத்தில் பலியாகிய இலங்கையின் பிரபல சிங்கள நடிகை யார்?
**யான் கவீஷா**

❒ பொது மக்களுக்கு அதிக வினைத்திறனும், விளைதிறனும் மிகுந்த சேவையினை வழங்கும் நோக்குடன் குடிவரவு-குடியகல்வு திணைக்களம் மற்றும் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் எங்கே ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டது?
**பத்தரமுல்லையில்**

❒ ஜனாதிபதியின் விமர்சனத்தின் எதிரொலியாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் தனது பதவியை இராஜினாமாச் செய்தார். அவர் யார்?
**தில்ருக்ஷி டயஸ் விக்கிரமசிங்க**

❒ அண்மையில் திறக்கப்பட்ட ஆணையிறவு புகையிரத நிலையத்திற்கு அரசினால் இடப்பட்ட பெயர் என்ன?
**"அன்பின் தரிப்பிடம்"**

❒ 2015/2016 ஆம் கல்வியாண்டு பல்கலைக்கழக அனுமதிக்கு இணைத்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை எத்தனை சதவீதமாக அதிகரிக் கப்பட்டுள்ளது?
**பத்து சதவீதம்**
இதேவேளை, இதன் பிரகாரம் 27 ஆயிரத்து 603 மாணவர்கள் பல்கலைக்கு இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

❒ இலங்கையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பசுமைப் பல்கலைக்கழகம் (NSBM - National School of Business Management) எங்கே உள்ளது?
**பிட்டிபன, ஹோமாகமவில்**
**2016 நவம்பர் முதல் தனது கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்கின்றது.**

❒ விளையாட்டுத்துறை அமைச்சின் அமைக்கப்பட்டுள்ள கேட்போர் கூடத்திற்கு யாருடைய பெயர் சூட்டப்பட்டுள்ளது?
**டங்கன் வைற்**
1948 இல் லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் இலங்கை சார்பாக 400 மீற்றர் சட்ட வேலி ஓட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்று ஒலிம்பிக் வரலாற்றில் இலங்கைக்கு முதலாவது பதக்கத்தைப் பெற்றுக் கொடுத்த டங்கன் வைற் என்பவரைக் கௌரவிக்கும் முகமாகவே இப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

❒ 2016, 2017 இல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் எவ்வளவு வீதமாக முன்னேற்றமடையும் என பொருளியல் வல்லுனர்களால் எதிர்வு கூறப்பட்டுள்ளது?
2016 - 4.8 வீதாமாகவும், 2017 இல் 5 வீதமாகவும் இருக்குமென எதிர்வு கூறப்படுகிறது. இதேவேளை, தெற்காசியாவில் இந்தியாவின்

பொருளாதாரம் முக்கியமான நிலையில் இருப்பதுடன், இதன் வளர்ச்சி 2017 ஆம் ஆண்டில் 7.7 வீதமாக இருக்கும் எனவும் உலக வங்கி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## இலங்கையில் இன்று இவர்கள்...

- பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை பதில் அமைச்சர் யார்?
  **கருணாரத்ன பரணவிதான**

- ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப் பட்டுள்ளவர் யார்?
  **பிரதிப்பொலிஸ்மா அதிபர் நிமல் லெவ்கே**

## உலகை நோக்கிய இம்மாத வலை வீசலில்...

- மரத்தை மட்டும் பாவித்துக் கட்டப்பட்ட கோவில் கின்னஸ் சாதனை படைத் தது. அந்தக் கோவில் எங்கே உள்ளது?
  **சீனாவின் சாங்சி பகுதியில் அமைந்துள்ள பொகொங் கோவில்**

- அண்மையில் காலமாகிய இஸ்ரேலின் முன்னாள் பிரதமர் யார்?
  **சீமோன் பெரிங்** (வயது-93)
  **இவர் சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.**

- மாஸ்டர் கார்ட்டினால் வருடாந்தம் வெளியிடப்படும் தரப்படுத்தலின்படி சுற்றுலா நகரங்களில் கொழும்பு எத்தனையாவது இடத்தைப் பிடித்துள்ளது?
  **4 ஆவது**
  **இதேவேளை, ஜப்பானின் ஒஸாகா முதலாம் இடத்தையும், சீனாவின் செங்டு மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் அபுதாபி இரண்டாம், மூன்றாம் இடத் தையும் பிடித்துள்ளன.**
  **அத்துடன், சுற்றுலாப் பயணிகள் அதிகளவு செலவு செய்யும் முதலாவது நகரங்களாக தாய்லாந்து, பாங்கொங் நகரம் முதலிடத்தைப் பிடித்துள்ளன.**

- மத்திய தரைக்கடலின் ஊடாக இந்த வருடம் (2016) பயணித்த சிறுவர்களில் எத்தனை பேர் சாவடைந்துள்ளதாக சிறுவர் பாதுகாப்பு நிதியம் அறிவித்துள் ளது?
  **600 சிறுவர்கள்**

◈ எயிட்ஸ் நோயாளி ஒருவரை பூரணமாகக் குணப்படுத்தி சாதனை படைத்த மருத்துவர்கள் எந்த நாட்டினர்?
**பிரிட்டன்**

◈ உலகின் அதிக வாழ்க்கைச் செலவு உடைய நகரமாக அறிவிக்கப்பட்டுள்ள நகரம் எது?
**சிங்கப்பூர்**
இதேவேளை, கொழும்பு 100 ஆவது இடத்தையும் பிடித்துள்ளது.
சுவிற்சர்லாந்தின் சூரிச் நகரம் இரண்டாமிடமும், கொங்கொங் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.
சென்னை 127 ஆவது இடத்தையும், மும்மை 131 ஆவது இடத்தையும் பிடித்துள்ளன.

◈ துருக்கியில் ஏற்பட்ட இராணுவப் புரட்சியின் காரணமாக எத்தனையாயிரம் பொலிஸார் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்?
**12 ஆயிரத்து 800 பேர்**

◈ கியூபா, ஹெய்ட்டியை புரட்டியெடுத்த (05.10.2016) புயலின் பெயர் என்ன?
**குறைசேன் மத்தியூ**
4 இலட்சம் பேர் இதனால் இடம்பெயர்ந்தனர். 900 பேர் வரை சாவடைந்துள்ளனர்.

◈ பெர்முடாவை அண்மையில் (15.10.2016) தாக்கிய சூறாவளியின் பெயர் என்ன?
**நிகோல்**

◈ பிலிப்பைன்ஸை அண்மையில் (18.10.2016) தாக்கிய சூறாவளியின் பெயர் என்ன?
**ஹைமா**

◈ அண்மையில் (06.10.16) தென்கொரியாவைத் தாக்கிய சூறாவளியின் பெயர் என்ன?
**"சபா"**

◈ முகத்தை மூடும் ஆடைக்கு தடை விதித்த நாடு எது? **நோர்வே**

◈ அணு ஆயுதத்தடைக்கு ஆதரவு தெரிவித்துள்ள நாடு எது? **அமெரிக்கா**

◇ உலகில் அதிக காலம் ஆட்சி செய்த மன்னர் என்ற பெருமை பெற்ற தாய்லாந்தின் மன்னர் யார்?
**பூமிபால் (வயது-88)**

◇ உலகின் மிக நீண்ட கால மன்னராட்சிக்கு சொந்தக்காரர் என்ற பெருமையைப் பெற்றவர் யார்?
**இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபேத்**

◇ 10 ஆயிரம் கிலோ மீற்றர் பாய்யும் அணு ஆயுதத்தை தயாரித்துள்ள நாடு எது?
**ரஷ்யா**

◇ கடலில் மூழ்கிய டைட்டானிக் கப்பலின் சாவி அண்மையில் எத்தனை ஆயிரம் பவுண்டுகளுக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டது?
**85 ஆயிரம் பவுண்ஸ்**
இங்கிலாந்தின் சவுத் ஆம்பன் நகரில் இருந்து அமெரிக்காவின் நியூயோர்க் நோக்கி கடந்த 1912 ஆம் ஆண்டு ஏப்ரலில் சென்ற ஆர்.எம்.எஸ். டைட்டானிக் கப்பல் வடக்கு அட்லாண்டிக் கடலில் பனிப்பாறையுடன் மோதி விபத்துக் குள்ளானது. இதில் 2 ஆயிரத்து 500 பேர் பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

◇ உலக வங்கி தனது நடப்பாண்டு ஆய்வில் தொழில் தொடங்குவதற்கு ஏற்ற நாடுகளின் பட்டியலில் முதலிடத்தில் உள்ள நாடு எதுவென அறிவித் துள்ளது?
**நியூஸிலாந்து**
முறையே சிங்கப்பூர், டென்மார்க், கொங்கொங், தென்கொரியா ஆகிய நாடுகள் உள்ளது.
கடந்த வருடம் சிங்கப்பூர் முதலிடத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

◇ ஐரோப்பிய விண்வெளி மையத்தினால் அண்மையில் அனுப்பப்பட்ட விண் கலம் வால் நட்சத்திரத்துடன் மோதியது. அந்த விண்கலத்தின் பெயர் என்ன?
ரொசெட்டா

◇ மத்திய தரைக்கடலில் பயணிக்கும் அகதிகளில் எத்தனை பேர் நாளாந்தம் இறப்பதாக பன்னாட்டு ஊடகமான சி.என்.என். நடத்திய ஆய்வில் குறிப் பிட்டுள்ளது?
8 பேர்

- 60 வயதான உராங்குட்டான் உலகின் மிக வயதானது என்ற பெருமையுடன் கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளது. அது எந்த நாட்டைச் சேர்ந்தது?
  **ஆஸ்திரேலியா**

- எந்த நாட்டில் அண்மையில் கொலரா தொற்று ஏற்பட்டுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது? **ஏமன்**

- பரிசுத்த பாப்பரசர் 2017 ஆம் ஆண்டு எந்த நாட்டுக்குப் பயணமாகவுள்ளார்?
  **இந்தியா**

- உலக கல்வி தொடர்பான வாக்குறுதியை நிறைவேற்ற எத்தனை மில்லியன் ஆசிரியர் தேவை என யுனெஸ்கோ அமைப்பு எச்சரித்துள்ளது.
  *69 மில்லியன்*

- உலகில் எத்தனை நிமிடங்களுக்கு ஒரு தடவை ஒரு சிறுமிக்கு திருமணம் நடைபெறுவதாக 'சேவ் த சில்ட்றன்' அமைப்பு தனது ஆய்வில் தெரிவித்துள் ளது?
  7 நிமிடங்களுக்கு

- ஜனவரி மாதத்தை ஆண்டு தோறும் தமிழ் கலாசார மாதமாகக் கொண்டாடப் போவதாக எந்த நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது?
  **கனடா**

- நபரொருவரைச் சுட்டுக்கொன்றதன் பிரகாரம் மரண தண்டனை நிறைவேற் றப்பட்ட சவூதி இளவரசர் யார்?
  **துர்கி சவுத் அல்-கபீர்**

- அமெரிக்காவின் கூட்டணியில் இருந்து விலகுவதாக அண்மையில் அறிவித் துள்ள நாடு எது?
  **பிலிப்பைன்ஸ்**

- எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை அடைந்த முதல் பெண்மணி அண்மையில் (22.10.2016) காலமானார். அவர் யார்? **ஜூங்கோ**

- உலகின் மிகவும் பழமையான பாய்மரக் கப்பல் ஒன்று நோர்வேயிலிருந்து கொழும்பு துறைமுகத்திற்கு வந்து சென்றது. அந்தக் கப்பலின் பெயர் என்ன?
  **எஸ்.எஸ்.சோர்லாண்டா**

## உலகின் இன்றைய நிலையில் இவர்கள்...

◎ சேர்பியான் நாட்டின் பிரதமர் யார்?
**அலெக்ஸ்சாண்டர் வியூசிக்**

◎ தென்னாசிய பாலியல் மருத்துவ சங்கத்தின் தலைவர் யார்?
**டொக்டர் லசந்த மாளவிகே**

◎ ஐ.நா.சபையின் சிறுபான்மை இன விவகாரங்களுக்கான விசேட நிபுணர் யார்?
**றீட்டா ஜசாக்**
இவர் அண்மையில் இலங்கை வந்து சென்றமை குறிப்பிடத்தக்கது.
(07-16 ஒக்ரோபர் வரை தங்கி நின்றார்)

◎ பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் யார்?
**பெட்றிஷியா ஸ்கொட்லன்**

◎ கடும்போக்கு ஜனாதிபதி என்று ஊடகங்களால் அழைக்கப்பட்டு வரும் ஜனாதிபதி யார்?
**பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ரொட்றிக்கோ டுதெர்ட்**

## விளையாட்டுப் பக்கம் நோக்கிய வலை வீசலில்...

⊙ யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேசிய தடகளத் தொடரில் கோலூன்றிப் பாய்தலில் புதிய சாதனை படைத்து தங்கப் பதக்கம் வென்ற வீராங்கனை யார்?
**ஜெ.அனித்தா (3 மீற்றர் 41 சென்ரிமீற்றர் உயரம்)**

⊙ உலக கார் பந்தயத் தொடரில் தனது 50 ஆவது வெற்றியைப் பதிவு செய்த வீரர் யார்? **லூயிஸ் கமில்டன் (பிரிட்டன்)**

⊙ பன்னாட்டு ஒருநாள் ஆட்டங்களில் அதிக சிக்ஷர்களைப் பதிவு செய்த இந்திய வீரர் என்ற சாதனையைப் படைத்த வீரர் யார்? **டோனி**

⊙ அண்மையில் (25.10.2016) காலமாகிய பிரேசிலின் தேசிய கால்பந்து அணியின் ஜாம்பாவான் யார்?
**கார்லஸ் (வயது-72)**

⊙ இலங்கை கிரிக்கெட் வரலாற்றில் முதல் முறையாக பயன்படுத்தப்பட்ட பந்து எது?
**இளஞ்சிவப்பு நிறப் பந்து**
மேற்கிந்தியத் தீவுகள் அணி அண்மையில் இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட போதே இவ் இளஞ்சிவப்பு பந்து வரலாற்றில் முதற் தடவையாக பயன்படுத்தப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

⊙ இந்தியாவில் நடைபெற்ற 12 நாடுகள் பங்கேற்ற கபடி உலகக் கிண்ணப் போட்டியில் விளையாட எந்த நாட்டுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது?
**பாகிஸ்தான்**

⊙ தெற்காசியப் போட்டிகளின் ஓர் அங்கமான நீர் நிலைப் போட்டிகள் எந்த நாட்டில் அண்மையில் (18-23-10-2016) நடைபெற்றது?
**இலங்கையில்**

⊙ கொழும்பில் நடைபெற்ற தெற்காசிய நீர்நிலை விளையாட்டுப் போட்டிகளில் தங்கம் வென்ற இலங்கை வீரர் யார்?
**தரிந்து உதயங்க**
இதில் சிறந்த வீரர்களாக மத்தியூ - கிமிக்கே தெரிவு செய்யப்பட்டனர்.

⊙ 2014 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியை நடத்தும் வாய்ப்பில் இருந்து விலகியுள்ள நாடு எது?
**இத்தாலி**

⊙ அண்மையில் எமிரேட்ஸில் நடைபெற்ற பாகிஸ்தான் மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டியில் முச்சதம் அடித்து சாதனை படைத்த வீரர் யார்? **அசார் அலி**

⊙ இலங்கையில் நடைபெற்ற ஆசிய றக்பி செவன்ஸ் இறுதிப்போட்டியில் தென்கொரியாவை வீழ்த்தி 2016 ஆம் ஆண்டுக்கான சம்பியன் பட்டத்தைப் பெற்ற அணி எது?
**ஹொங்கொங்**

⊙ 2018 இல் பிபா உலகக் கிண்ண கால்பந்துப் போட்டி எந்த நாட்டில் நடைபெறவுள்ளது?
**ரஷ்யாவின் தலைநகர் மோங்கொ**
இந்தத் தொடருக்கான அதிகாரபூர்வ சின்னமாக "ஸ்பிலாகா" ஓநாய் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## அயல்நாட்டுப் பக்கம் நோக்கிய வலை வீசலில்...

✧ "ஆசியாவின் இதயம்" மாநாடு இந்த வருடம் (2016) எந்த நாட்டில் (04.12.2016) நடைபெறவுள்ளது?
இந்தியா
ஆப்கானிஸ்தானில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை வலுப்படுத்தும் வகையில் கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் ஆசியாவின் இதயம் மாநாடு ஆண்டு தோறும் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.
ஆப்கானிஸ்தான் மற்றும் இந்தியா, பாகிஸ்தான் போன்ற அதன் அண்டை நாடுகள் பங்கேற்கும் இந்த மாநாட்டில் ஆப்கானிஸ்தானுடனான பிராந்திய பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி, உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்படும்.
கடந்த வருடம் இம்மாநாடு பாகிஸ்தானில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## விருதுகள் பக்கம் நோக்கிய வலை வீசலில்...

✧ 2016 ஆம் ஆண்டுக்கான 'மான்புக்கர்' (Man booker) விருது கிடைக்கப்பெற்ற எழுத்தாளர் யார்?
போல் பெற்றி (அமெரிக்கா)
ஆண்டு தோறும் வெளியிடப்படும் ஆங்கில நாவல்களில் சிறந்த நாவல் தெரிவு செய்யப்பட்டு பிரிட்டனில் வைத்து மான்புக்கர் விருது வழங்கப்படுவது வழமை.

- இவர் நையாண்டி எழுத்தாளராவார்.
- "த செல் அவுட்" (The Sellout) என்ற சமூக நையாண்டி நாவலே விருதைப் பெற்றது.

  அமெரிக்க எழுத்தாளர் ஒருவருக்கு மான்புக்கர் விருது வழங்கப்படுவது இதுவே முதற்தடவை.

  இந்நாவல் அமெரிக்காவில் காணப்படும் நிறவெறிக் கொள்கைகளைக் கேலி செய்யும் விதத்தில் எழுதப்பட்டுள்ளது.

கடந்த 48 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வந்த வழக்கப்படி லண்டனில் ஐந்து நீதிபதிகள் கொண்ட தேர்வுக்குழுவினர் 155 நாவல்களை வாசித்து இறுதியில் மேற்படி நாவலைத் தெரிவு செய்தனர்.

✧ 2016 ஆம் ஆண்டின் இலங்கையின் உறுதியான வங்கி என்ற விருதினை ஏஷியன் பேங்கரிடமிருந்து பெற்றுக்கொண்ட வங்கி எது? கொமர்ஷல் வங்கி

✧ நான்காவது உலகளாவிய கௌரவ அதிகாரிகள் விருது பெற்ற முதலாவது இலங்கைப் பெண்மணி யார்?
**திருமதி ஞானாம்பிகை அல்லிராஜா**
அனாதைகள், கைவிடப்பட்ட நபர்களுக்கு உதவும் சேவையை சௌரவிக்கும் முகமாக இவ்விருது அவருக்கு வழங்கப்பட்டது.
இந்நிகழ்வு நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐ.நா. தலைமையகத்தில் நடைபெற்றது.

✧ மூன்றாவது தடவையாக **Globel Banking & Finance** சஞ்சிகையின் விருது இலங்கையில் எந்த வங்கிக்கு கிடைத்தது?
**பான் ஏசியா வங்கி**

✧ ஐ.எஸ். தீவிரவாதிகளிடமிருந்து தப்பி வந்த இரு பெண்களுக்கு கிடைக்கப்பெற்ற ஐரோப்பிய பாராளுமன்றின் கௌரவ உயர் விருது என்ன?
**சகரோவ் மனித உரிமை விருது**

## நான் கேட்டவை, அறிந்தவை, படித்தவை உங்களுக்காக...

⌖ சாரணர் இயக்கம் எதற்காக உருவாக்கப்பட்டது?
**இளைய சமூகத்தின் மத்தியில் உடல், உள, சமூக ரீதியான மேம்பாடுகளை ஏற்படுத்தவே உருவாக்கப்பட்டது. இது 1907 இல் பேடன் பவல் பிரபுவால் உருவாக்கப்பட்டது.**

⌖ இலங்கையில் சாரணர் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய அதியுயர் விருது எது? **ஜனாதிபதி பதக்கம்**

⌖ தொற்றா நோய்கள் எனப்படுபவை எவை?:
**புற்றுநோய், சிறுநீரக நோய், நீரிழிவு**

⌖ "சூரியன் உதிக்கும் வரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இருக்கும்" என்ற கருத்தினை வெளியிட்ட இலங்கையின் சட்டத்தரணி யார்?
**எச்.ஸ்ரீநிஸங்க**

⌖ மாலி எந்த நாட்டில் உள்ளது? **மேற்கு ஆபிரிக்கா**

⌖ இலங்கையில் அமைக்கப்பட்ட முதலாவது சிறைச்சாலை எது?
**வெலிக்கடை *(1818)***

⌖ நம்பகத் தன்மையான தனிநபர் அடையாளம் எது?
**தேசிய அடையாள அட்டை**

⌖ மகாகவி பாரதியார் ஆரம்பித்த பத்திரிகையின் பெயர் என்ன?
**இந்தியா**

⌖ ஐ.நா. சபை எப்போது ஸ்தாபிக்கப்பட்டது?
***1945 ஒக்ரோபர் 24. இதுவே ஐ.நா. தினம் எனப்படுகிறது.***

⌖ *2018 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள குளிர்கால பரா ஒலிம்பிக் போட்டி எந்த நாட்டில் நடைபெறவுள்ளது?*
***10 சதவீதம்***

⌖ **Five Hundred Meter Aperture Spherical Radio Telescope - (FAST)** என்பது யாது?
**வேற்று உயிரினங்களின் தேடல்களுக்காக சீனா உலகின் மிகப்பெரிய 500 மீற்றர் (1640 அடி) நீளம் கொண்ட தொலைநோக்கி ஒன்றினை அமைத்தது. அதற்கு இடப்பட்ட பெயரே இதுவாகும்.**

⌖ உலகில் நீரில் மூழ்கி உயிரிழக்கும் சம்பவங்கள் அதிகம் இடம்பெறும் நாடுகளின் பட்டியலில் இலங்கை எத்தனையாவது இடத்தில் உள்ளது?
**12 ஆவது இடத்தில்**

⌖ ஐரோப்பிய கால்பந்தாட்டப் போட்டி எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகிறது?
**நான்கு ஆண்டுகள்**

⌖ இலங்கையின் 42 ஆவது தேசிய விளையாட்டு விழா 2017 ஆம் ஆண்டு எந்த மாகாணத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது?
**சப்ரகமுவ மாகாணம்**

⌖ 16 ஆவது பரா ஒலிம்பிக் போட்டி 2020 ஆம் ஆண்டு எங்கே நடைபெறவுள்ளது?
**ஜப்பான் தலைநகர் டோக்கியோவில்**

⌖ அவசர நிலைமைகளின் போது சிறார்களுக்கு உதவி செய்வதற்காக நிறுவப்பட்டுள்ள ஐ.நா. சபையின் விசேட நிறுவனம் எது?
**யுனிசெவ்**


# 2016 நோபல் பரிசு ஒரே பார்வையில்....



## ⊙ மருத்துவம் :

யோசினோரி ஒசுமியா (ஒஷீமிக்) - (ஜப்பான்), (வயது-71)


உடல் எவ்வாறு முறிவுக்குள்ளாகிறது மற்றும் கல உள்ளடக்கங்கள் எவ்வாறு மீள் சுழற்சிக்கு உட்படுத்தப்படுகின்றன என்பன தொடர்பில் மேற்கொண்ட கண்டுபிடிப்புக்காக இது வழங்கப்பட்டுள்ளது.



## ⊙ இயற்பியல் / பௌதிகவியல் :

டேவிட் தவ்லெஸ் - (பிரிட்டன்)
டங்கன் ஹால்டன் - (பிரிட்டன்)
மைக்கல் கோஸ்டர்லிட்ஸ் - (பிரிட்டன்)

மூலப்பொருட்களின் வேறுபட்ட உருவாக்கங்கள் தொடர்பில் அவர்கள் மேற்கொண்ட கண்டுபிடிப்புகளுக்காக இது வழங்கப்பட்டுள்ளது.



## ⊙ இரசாயனவியல் : (வேதியல்)

ஜீன்-பியர் சவாஜ் - (பிரான்ஸ்)
ஜே.பிரேஸர் ஸ்டட்டார்ட் - (அமெரிக்கா)
பெர்னார் எல். ஃபெரிங்கா - (நெதர்லாந்து)

மூலக்கூறுகளின் அளவில் இயந்திரக்கூறுகளை வடிவமைத்தமைக்காக வழங்கப்படட்டுள்ளது.



## ⊙ இலக்கியம் :

பொப் டிலன் (அமெரிக்கப் பாடகர் - மக்கள் கவிஞர்)

அமெரிக்க பாடல் மரபில் புதிய கவிதை வெளிப்பாட்டைக் கொண்டு வந்ததற்காக இது வழங்கப்பட்டுள்ளது.



## ⊙ பொருளாதாரம் :

ஒலிவர் ஹாரட் - (பிரிட்டன்) - (வயது-68)
பெங்ட் ஹோம்ஸ்ட்ரோ (பின்லாந்து) - (வயது-67)

மக்கள் அரசாங்கங்கள் மற்றும் வணிகம் ஆகியவற்றுக்கு இடையேயான ஒப்பந்தம் குறித்து அதாவது உடன்படிக்கை விதி தொடர்பில் இருவரும் ஆய்வுகளை மேற்கொண்டதற்காக வழங்கப்பட்டுள்ளது.




## ⊙ சமாதானம் / அமைதி :

யுவான் மனுவல் சாந்தோஸ்
(கொலம்பிய நாட்டு ஜனாதிபதி) (வயது-65)

கொலம்பிய புரட்சிகர ஆயுதப்படை கிளர்ச்சியாளர்களுடனான 52 வருட கால மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அவர் மேற்கொண்ட முயற்சிகளுக்காகவே இந்தப் பரிசு வழங்கப்பட்டுள்ளது.


# நுண்ணறிவு - IQ

01.





i) H ii) I iii) M iv) K

02.





i) O ii) G iii) M iv) X

03.





i) A ii) E iii) J iv) B

04.




i) 2 ii) 5 iii) 4 iv) 3

05.




i) 6 ii) 5 iii) 4 iv) 1

06. ஒரு பள்ளியில் 600 மாணவர்களுக்கு இலவச சீருடைகள் வழங்கப்பட்டன. அப்பாடசாலையில் மாணவர், மாணவிகளுக்கிடையிலான விகிதம் 3 : 2 எனில் மாணவிகள் எண்ணிக்கை யாது?

i) 500பேர் ii) 120பேர்
iii) 240பேர் iv) 400பேர்

07. ஒரு சுற்றுலாவில் பங்குபற்றிய ஆசிரியர் குழாமில் 115 பேர் இருந்தனர். அவர்களில் 3/5 பங்கினர் பெண்களாவர். அந்த ஆசியர் குழாமிலுள்ள ஆண் ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது?

i)29 ii)46 iii)35 iv)32

08. போட்டிப் பரீட்சை ஒன்றில் தோற்றியவர்களில் 62 % வீத மானவர்கள் சித்திபெற்றிருந்தார்கள். சித்தியடைந்தவர்கள் எண்ணிக்கை 7750 எனில் பரீட்சைக்குத் தோற்றியவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

i) 11000 பேர் ii) 14000 பேர்
iii)13300 பேர் iv) 12500 பேர்

09. சங்கர் 4 பாடங்களுக்கு சராசரியாக 80 புள்ளிகளை பெற்றிருப்பின், மூன்று பாடங்களில் அவன் பெற்ற புள்ளிகள் 85, 82,75 எனில், மற்றைய பாடத்தில் பெற்ற புள்ளி யாது?

i)77 ii)76 iii)81 iv)78

10. எளிய வருட வட்டி 12% படி 2 இலட்சத்தை 30 மாதங்களுக்கு வங்கியில் கடனாகப் பெற்ற ஒருவர் வங்கிக்குச் செலுத்தவேண்டிய மொத்த வட்டியின் அளவு யாது?
i)70 000ரூபா ii)60 000ரூபா iii) 72 000ரூபா iv)36 000ரூபா

11. ஒரு பொருளை 75 ரூபாவிற்கு வாங்கி 84 ரூபாவிற்கு விற்றால் கிடைத்த லாப சதவீதம் எவ்வளவு?
i) 10% ii) 14% iii) 12% iv) 9%

12. தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் இருவர் முறையே 55%, 45% சதவீத வாக்குகளைப் பெற்றிருந்தார்கள். அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 3 இலட்சம் 20 ஆயிரம் எனில் வெற்றிபெற்றவர் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை யாது?
i) 172 000 ii)176 000 iii) 175 000 iv) 180 000

13. எட்டு எண்களின் சராசரி 50 ஆகும். அவற்றில் முதல் ஐந்து எண்களின் சராசரி 60 உம் இறுதி நான்கு எண்களின் சராசரி 35 உம் ஆகும். ஐந்தாம் எண் பின்வருவனவற்றில் யாது?
i) 45 ii) 35 iii) 40 iv) 30

14. ஜெயதேவன் மகாதேவனைப் போன்று இருமடங்கு கதியில் ஓடுகிறான். குறித்த கணத்தில் மகாதேவன் ஜெயதேவனுக்கு 200 மீற்றர் முன்பாக இருக்கும் அதேவேளை 50 செக்கன்களுக்குப் பின்னர் ஜெயதேவன் மகாதேவனைக் கடந்து ஓடுகின்றான். 40 செக்கனின் மகாதேவன் ஓடும் தூரம் யாது?
i) 140 m ii) 160 m iii) 170 m iv) 180 m

15. A,B என்னும் இரு புகையிரத நிலையங்கள் இருக்கும் நேர்ப் புகையிரதப் பாதை ஒன்றின் வழியே ஒரு புகையிரதம் ஒரு சீர்கதியில் செல்கிறது. அது 200 மீற்றர் நீளமுள்ள A யைக் கடந்து செல்வதற்கு 10 செக்கன்களும், 300 மீற்றர் நீளமுள்ள B யைக் கடந்துசெல்வதற்கு 14 செக்கன்களும் எடுக்கின்றது.
பின்வருவனவற்றுள் எது புகையிரதத்தின் நீளமாகும்.
i) 30 m ii) 35 m iii) 40 m iv) 50 m

16. 2005 ம் ஆண்டு நத்தார் தினம் ஒரு ஞாயிற்றுக்கிழமையாகும். 2008 ஆம் ஆண்டின் நத்தார் தினம் வரும் நாள் யாது?
i) வியாழக்கிழமை ii) ஞாயிற்றுக்கிழமை
iii) புதன்கிழமை iv) சனிக்கிழமை

17. மோகனாவின் சகோதரி கீதா, ரேவதியின் மகள் மாலா, மாலாவின் மகள் மோகனா, கீதா ரேவதிக்கு என்ன உறவு முறையானவர்?
i) பாட்டி ii) பேர்த்தி iii) மாமி iv) தாய்

18. கீழுள்ள எண் தொடரில் '4' எத்தனை முறை வந்துள்ளது? (அந்த '4' அதற்கு முன்னால் உள்ள எண்ணை மீதியின்றி வகுக்க வேண்டும்)
2, 4, 4, 8, 4, 2, 4, 6, 3, 8, 4, 4, 2, 1, 3
i) 4 ii) 2 iii) 5 iv) 3

19. கீழுள்ள எண் தொடரில் 6,7,8 ஆகிய எண்கள் எத்தனை முறை இணைந்து வந்துள்ளது?
6, 5, 3, 6, 7, 8, 7, 2, 8, 6, 7, 2, 8, 6, 7, 8
i) 1 ii) 3 iii) 2 iv) 4

20. கீழுள்ள எண்தொடரில் அடுத்துவரும் எண்ணினால் மீதியின்றி வகுபடும் எத்தனை ஆறுகள் உள்ளன?
5, 6, 4, 3, 2, 6, 2, 6, 2, 6, 3, 4, 6, 5, 6, 2
i) 3 ii) 4 iii) 1 iv) 2

21 தொடக்கம் 25 வரையயான வினாக்களுக்கு அடுத்துவரும் உறுப்பைக் காண்க

21. 4, 9, 25, 49, 121, .........

22. 1, 8, 27, 64, .........

23. B, C, E, G, K, .........

24. 45, 42, 35, 32, 25, .........

25. 1/3, 1/9, 1/27, 1/81, 1/243 .........

பின்வரும் தரவுகளுக்கு ஏற்ப 26 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையைக் காண்க

ஐந்து ஆங்கிலச் சொற்களின் எழுத்துக்களுக்கு எண் பெறுமானங்களை அளித்து அவற்றின் கூட்டுத்தொகையை எடுக்கும்போது ஒவ்வொரு சொல் லுக்கும் கிடைக்கும் பெறுமானம் அதற்கு எதிரே தரப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| FOR | = | 42 |
| AIR | = | 53 |
| OFFICE | = | 118 |
| RACE | = | 81 |
| FORCE | = | 88 |

26. C, E ஆகியவற்றின் பெறுமானங்களின் கூட்டுத்தொகை யாது?

27. I பெறுமானம் யாது?

28. F பெறுமானம் 21ஆக இருக்கும்போது O வின் பெறுமானம் யாது?

29. F பெறுமானம் 21ஆக இருக்கும்போது A வின் பெறுமானம் யாது?

30. F பெறுமானம் 21ஆக இருக்கும்போது ACE யின் பெறுமானம் யாது?

## நுண்ணறிவு வினாக்களுக்கான விடைகள்

01. (iv) - K
02. (ii) - G
03. (i) - A
04. (ii) - 5
05. (iii) - 4
06. (iii) - 240 பேர்
07. (ii) - 46
08. (iv) - 12500 பேர்
09. (iv) -78
10. (ii) - 60 000 ரூபா
11. (iii) - 12%
12. (ii) - 176 000
13. (iii) - 40
14. (ii) - 160 m
15. (iv) - 50 m
16. (i) - வியாழக்கிழமை
17. (ii) - பேர்த்தி
18. (i) - 4
19. (iii) - 2
20. (iv) - 2
21. 169
22. 125
23. M
24. 22
25. 1/729
26. 46
27. 18
28. 12.
29. 26
30. 75

## ◆ ஐ.நா.வின் செயலாளர் நாயகம்



- ஐக்கிய நாடுகள் சபையின் ஒன்பதாவது செயலாளர் நாயகமாக போர்த்துக்கல் நாட்டின் முன்னாள் பிரதமரான **அன்ரனியோ குட்டெரெஸ்** (வயது-66) தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
- புதிய செயலாளர் நாயகத்தின் ஐந்து வருட பதவிக்காலம் 01.01.2017 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.
- ஐக்கிய நாடுகள் சபையை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தக் கூடிய ஒரு வலிமை மிக்க செயலாளராகவே இவர் பார்க்கப்படுகின்றார்.

## வேலைவாய்ப்பு படிவங்கள்

அரச வர்த்தமானியில் வெளிவருகின்ற அனைத்து வேலைவாய்ப்புப் படிவங்களும் வெளிவந்து யாழ்.பூபாலசிங்கம் புத்தகசாலையில் விற்பனையாகிறது. வலையின் கடந்த கால இழைகளையும் அங்கு பெற்றுக்கொள்ள முடியும்.



## சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் அவர்களின் பார்வையில்...

வலையின் 59 ஆவது இதழ் பார்த்தேன். சஞ்சிகையைப் பார்த்ததும் மிகவும் உளப்பூரிப்பு அடைந்தேன்.

சமகாலப் பொது அறிவுத் தொகுப்பாக இச்சஞ்சிகை வெளிவருகிறது. தன் நம்பிக்கையும், முயற்சியும் உள்ள மானிடர்கள் எவரும் வாழ்க்கையில் தோல்வி கண்டதாக வரலாறு இல்லை. எஃகு போன்ற தசையும் இரும்பு போன்ற நரம்பும் கொண்ட இளைஞர் சமுதாயம் உருவாக வேண்டும் என்றார் சுவாமி விவேகானந்தர்.

நாம் செய்கின்ற காரியங்களில் தடைகள் வரலாம், சோதனைகள் ஏற்படலாம். இவற்றைக் கண்டு சோர்வடையாது, சோதனைகளை எல்லாம் போதனைகளாக்கிக் கொண்டு சாதனை செய்பவனே உயர்ந்த மனிதன் ஆவான்.

"தூயவை துணிந்த போது பழிவந்து தொடர்வதில்லை" என்பது கம்பன் வாக்கு தளர்வறியா மனத்துடன் காரியங்களைச் செய்தால் நாமும் சாதனையாளர்களாக மாறலாம்.

இத்தகைய வெளியீட்டினால் எமது மாணவர் சமுதாயம் பெரும் பயனைப் பெறும் வாய்ப்பு உண்டாகிறது. உங்கள் பணி தொடர எனது மனம் நிறைந்த ஆசிகள்...

திரு.சிவ.மகாலிங்கம்,
சிவத்தமிழ் வித்தகர், கலாபூஷணம்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்



தொடர்புக்கு : சி.என்.எச்.சாள்ஸ், 163 செம்மணி வீதி, நல்லூர். தொ.இல : 0776913337
heyncharles@gmail.com